Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BODINAYAKANUR

**C.C No. 242 /2022**

Depositions of - மாரியம்மாள் ..witness for ...Prosecution Side Witness 1 (LW- 1 )

Name - மாரியம்மாள் (PW-1)
Father's and Husband's name - கிருஷ்ணன்
Village -
Taluk -
Caste -
Calling -
Religion -
Age -
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08.06.2023.

**சாட்சி அழைக்கப்பட்டு திருமதி . N. சுஜாதேவி, கிரேட் 3 பெஞ்ச் கிளர்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**
**( எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை-**

நான் போடி வினோபாஜி காலனியில குடியிருந்து, கட்டட வேலை செய்து வருகிறேன். எனது தங்கை வீரலட்சுமிக்கும், அவரது கணவர் சென்றாயனுக்கும் இடையே பத்து வருடமாக பிரச்சனை இருந்துவந்தது. தற்சமயம் 3 வருடமாக எனது தங்கை எனது வீட்டில் தான் கணவரை விட்டு பிரிந்து இருந்து வருகிறார். 23.02.2021ம் ஆண்டு நானும், எனது தங்கை மகன் தர்ஷண பிரசாத், தங்கை ஆகிய மூவரும் வேலைக்கு போய் விட்டு வந்து வீட்டுக்கு மாலை 6 மணிக்கு வந்தோம். போஜன் பார்க் அருகே வந்தபோது, அப்போது சென்றாயன் எனது தங்கையை ஆபாசமான வார்த்தையால் பேசினார். இருவருக்கும் கைகலப்பு ஏற்பட்டது. நான் சென்று அவர்களை விலக்கினேன். சென்றாயன் அவரது காரில்இருந்து ஜாக்கி கம்பியை எடுத்து எனது தலையில் அடித்தார். பின்னர் போடி அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சைக்காக சேர்ந்தேன். போலிசார் வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் எழுதி சென்றார்கள். 06.03.2021ம் தேதி போடி பேருந்து நிலையம் அருகே நான், எனது தங்கை வேலையை விட்டுவ ரும்போது சென்றாயன் என்னிடம் வந்து, நீதானே உனது தங்கையிடம் சொல்லிக்கொடுத்து எங்களை பிரித்து வைக்கிறாய் என்று ஆபாசமான வார்த்தைகளால் பேசினார். பின்னர் போடி நகர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் அதசாஆ.1** . வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

G K VELUMAYIL
Digitally signed by G K VELUMAYIL
Date: 2023.06.10 17:20:50 +0530